நங்கையர் மூளைதக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11,
தொலைபேசி- 422839, 43*238

செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6582 1990 மே 7 திங்கட்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO-11.
Phone: 422839 434238

சிகிரியாவில் கொள்ளையரை தேடிச் சென்ற

# ஹெலி விமானம் கீழே விழுந்து நொருங்கியது

## ஆறு பேர் கருகி இறந்தனர்

கொழும்பு, மே 6

**சிகிரியாவில் கொள்ளையர்களைத் தேடிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியது. இந்த கோரச் சம்பவத்தில் விமானி உட்பட 6 விமானப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.**

இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை ஹபரன அருகே நிகழ்ந்தது.

சிகிரியாவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளிடம் இருந்து பணம் நகை ஆகியவற்றை கொள்ளை அடித்து விட்டு தப்பிச் சென்ற 17 பேரைத் தேடிச் சென்ற போதே இந்த விபத்து நடந்துள்ளது.


விமானி பீரிஸ்

அதில் இருந்த 6 பேரின் சடலங்களும் எரிந்தும், சிதைந்தும் கண்டெடுக்கப்பட்டன.

பலத்த காற்று மழை, இருள் ஆகியவற்றினாலேயே இந்த விபத்து நடந்து இருக்கலாம் என விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயினும் இது தொடர்பாக பூரண விசாரணை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

ஹெலிக்கொப்டருடன் தொடர்புகள் அற்றுப் போன தன் பின்னர் அதனைத் தேடுவதற்

(ண-ற)

## பட்டம் வழங்கலில் மோசடி என புகார்

பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் பின்படிப்புப் பட்டம் வழங்குதலில் நடைபெறுவதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாகப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்தி

## சோமண்ணை


போதையை இறக்க இது நல்ல மாற்று மருந்துதான் பாருங்கோ.

## பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள்

### அமைச்சர் லலித் நடவடிக்கை

கொழும்பு, மே 6

சகல பாடசாலைகளிலும் ...ரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

காஷ்மீர் எல்லையில்

## இந்திய—பாக் படையினர் துப்பாக்கிச் சண்டை

ஜம்மு மே 6

காஷ்மீர் எல்லைப் புறத்தில் இந்திய பாகிஸ்தானிய துருப்புக்கள் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டன. இதனால் பாகிஸ்தானிய வீரர் இருவர் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இந்த மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

அடிக்கடி துருப்புக்களின் மோதல் இடம்பெறும் செகூர் பிரதேசத்தில் இரு நாடுகளுக்கும் சொந்தமல்லாத எல்லைப் புற நடுப்பகுதியில் பாகிஸ்தானிய துருப்புக்கள் பதுங்கு குழி ஒன்றை அமைப்பதில் முனைந்திருந்த போதே இந்திய வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்த மோதலையடுத்து

[2ஆம் பக்கம் பார்க்க]

# வட பகுதியில் சூறாவளி ஏற்படும் அபாயம்

கொழும்பு மே 6

இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து 250 மைலுக்கு அப்பால் பவன அமுக்கச் சுழி ஒன்று உருவாகி வருகிறது. இதனால் சூறாவளி ஏற்படக் கூடிய அபாயம் இருப்பதாக வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் அடுத்த 48 மணித்தியாலத்திற்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என வடக்கு, கிழக்கு மாகாண மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த பவன அமுக்கம் மேற்கு நோக்கி நகர்ந்து செல்வதால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுடன் கடும் மழை பெய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுழி தொடர்ந்தும் அதே திசையில் முன்னேறிச் செல்லுமானால் யாழ்ப்பாணத்தில் கடும் பாதிப்புகள் ஏற்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

(ண-ற)

## விமானம் விழுந்து 16 பேர் மரணம்

கொழும்பு, மே 6

கொத்பாலா விமான நிலையத்தில் இருந்து அமெரிக்காவுக்கு புறப்பட்ட சரக்கு விமானமொன்று கடந்த சனிக்கிழமை அந்த நகரின் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து வெடித்து விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் 16 பேர் மரணமானார்கள்.

விமான சிப்பந்திகள் மூவரும் குடியிருப்புகளில் வசித்த

[2ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர் குழு புலிகளுடன் பேசும்

சென்னை மே 6

இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் இந்திய மீனவ சமூக பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்துவர்.

இராமேஸ்வர மீனவர் தூதுக் குழு ஒன்று இவ்வார இறுதிக்குள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

கழக மானிய ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்திருக்கிறது.

கலைத் துறையிலேயே இந்த மோசடி நடைபெற்று வருகிறது என்று கூறப்படுகிறது.

பட்டப் பின்படிப்பு மாணவர்களிடம் இருந்து மோசடியாகப் பணம் பெறப்பட்டு அவர்களுக்குக் கூடுதல் புள்ளிகள் வழங்கப்படுவதாக பிரஸ்தாப முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த மோசடி தொடர்பாகப் பல்கலைக்கழக உயர் வட்டாரங்களிடமும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ண—007)

தொடர்புகள் அற்றுப் போனதன் பின்னர் அதனைத் தேடுவதற்காக விமானப் படையினரும், இராணுவத்தினரும், பொலீஸாரும் அனுப்பப்பட்டனர்.

ஹெலிக்கொப்டர் சிகிரியாவிலிருந்து 6 மைல் தொலைவில் நொருங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

## இன்று முதல் 12ம் திகதி வரை
## கால்நடை அறுக்கத் தடை

கொழும்பு, மே 6

இன்று 7ஆம திகதி முதல் 12ஆம திகதி வரை இறைச்சிக்காக கால்நடைகள் அறுக்கப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

வெசாக் வாரத்தை முன்னிட்டே அரசு இத்தடையை விதித்துள்ளது.

இக்காலப் பிரிவில் இறைச்சி விற்பனையும தடை செய்யப்படும. (ண—007)

கொழும்பு, மே 6

சகல பாடசாலைகளிலும கூட்டுறவு ஊழியர் சஙகஙகள் அமைக்கப்படும.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இப்படித் தீர்மானித்திருக்கிறார்.

பகல் உணவுக்குப் பதிலாக மாணவர்களுக்கு கூப்பன் பத்திரஙகள் வழஙகப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்குத் தேவைப்படும பாடசாலை உபகரணஙகளை வழஙகுவதற்கே இந்தக் கூட்டுறவுச் சஙகஙகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்தச் சஙகஙகள் மூலம பாடசாலைகளுக்கும நன்மை கிடைக்கும எனவும்,

ஆதலால் இத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறும அமைச்சர் பாடசாலை அதிபர்களைக் கேட்டிருக்கிறார்.

பாடசாலை மாணவர்களுக்குக் கூட்டுறவின் இலட்சியம, பொறுப்பு, உரிமை போன்றவை பற்றி கல்வி புகட்டவும இந்தத் திட்டம உதவும.

ஆகவே, இதனைப் பாடசாலை பாடத் திட்டத்தில் சேர்க்கவும அமைச்சர் உத்தேசித்திருக்கிறார். (ண—007)

# மது அருந்தும் அமைச்சர்கள் பதவி துறக்க வேண்டும்
## —ஜனாதிபதி

கொழும்பு மே 6

மது பானத்திற்கு அடிமையான அமைச்சர்களும எமபிக்களும தத்தமது பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டும. விருந்து வைபவஙகளிலோ அல்லது வீடுகளிலோ மது அருந்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு கூறியிருக்கிறார். இதனை தகவல்துறை அமைச்சர் ராஜாங்க அமைச்சர் திரு ஏ. ஜே ரணசிஙக தெரிவித்தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு உலக நாடுகளுக்கு அனுப்புவதற்காக ஆஙகில மொழியில் "பௌதத தர்மம" தொடர்பான புததகஙகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை தகவல்துறை ராஜாஙக அமைச்சர் திரு ரணசிஙகவிடம கையளிக்கும வைபவம ஒன்று நடைபெற்றது.

கொழும்பு பௌத்தாலோக் மாவத்தையில் உள்ள பௌத்த நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ரணசிஙக மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார், அவர் மேலும கூறியதாவது—

(2 ஆம பக்கம பார்க்க),

## இம்முறை கொழும்பில் 15 வெசாக் பந்தல்கள்

கொழும்பு, மே 6

இமமுறை கொழுமபில் 15 மின்விளக்கு அலஙகாரப் பந்தல்கள் வெசாக்கின் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன.

வெசாக் காலத்தில் ஐமபதுக்கும அதிகமான தான சாலைகள் கொழுமபில் திறக்கப்படும என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் அமைதியும சமாதானமும நிலவி வருவதையடுத்து இமமுறை வெசாக் திருநாளின் போது பெரும எண்ணிக்கையான மக்கள் கொழுமபில் கூடுவர் என பொலீஸார் எதிர்பார்க்கின்றனர். இதனால் விசேஷ போக்குவரத்து ஏற்பாடுகளை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

பொரளை, மருதானை, புறக்கோட்டை மற்றும கிராண்ட்பாஸ் ஆகிய இடஙகளில் பிரமாண்டமான கண்கவர் மின் விளக்கு அலஙகாரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொமபனி வீதி, துறைமுக தாதுகோபுரம, பேலியாகொடை ஆகிய இடஙகளிலும வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதே சமயம நாரஹேன்பிட்டி, கிருலப்பனை, மருதானை ஆகிய இடஙகள் உட்பட கொழுமபின் பல்வேறு பகுதிகளில் தான சாலைகள் திறக்கப்படும.

எதிர்வரும ஒன்பதாம மற்றும பத்தாம திகதிகளில் கொழுமபு வரும மக்களின் வசதியை முன்னிட்டு போக்குவரத்து சபை விசேஷ பந்தல் சேவைகளை நடத்தும. (ண—032)

## இந்திய வம்சாவளியினர் விவகாரம்
## மத்திய அரசுடன் பேச்சு தமிழக அரசு நடத்தும்

சென்னை மே 6

இலஙகையில் உள்ள சுமார் ஒரு லட்சம இந்திய வமசாவளி மக்களை தமிழ்நாட்டில் குடியமர்த்துவதால் ஏறபடும சுமையினை ஏற்பது தொடர்பாக தமிழ்நாடு அரசாஙகம இந்திய மத்திய அரசுடன் கலந்துரையாடும.

திருச்சியில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

முதல்வர் கருணாநிதி மேலும் கூறியதாவது—

தமிழ் ஈழப் பிரச்சினை இலஙகையரசுக்கும தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும இடையிலான பிரச்சினையாகும.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முகாம்கள் ஏதும இல்லை. தமிழ் நாட்டுக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டிய அவசியமும் இல்லை.

தமிழக மீனவர்கள் தமிழ் நாட்டுக் கடல் எல்லையை அறியாமல் எல்லையைக் கடக்காமல் இருப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் விடயத்தில் மத்திய அரசின் உதவி கோரப்பட்டுள்ளது.

இப்படி திரு கருணாநிதி கூறியதாக அகில இந்திய வானொலி செய்தி ஒலிபரப்பியது. [ண—ற]

## வடக்கு கிழக்கு மாகாண சபை
# முஸ்லிம் உறுப்பினர்கள் பாக்கிச் சம்பளம் கோருகின்றனர்

கொழுமபு மே 6

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம காஙகிரஸ் உறுப்பினர்களினதும, அவர்களின் மெய்ப் பாதுகாவலர்களினதும இரண்டு மாத சமபளத்தை வழஙகுமாறு மாகாண சபைகள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேராவிடம அந்த மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம தொடர்பாக மேற்படி உறுப்பினர்களின் சார்பில் மாகாண சபையின் முஸ்லிம காஙகிரஸ் உறுப்பினர் ஜனாப் ஏ எல் அப்துல் மஜீத அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேராவிற்கு கடிதம ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது—

வடக்கு, கிழக்கு மாகாண சபை ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய அரசப் பேரவையாக கடந்த மார்ச் மாதம 1ஆம திகதி பிரகடனப் படுத்தப்பட்டது.

இதனை எதிர்த்து அன்றைய மாகாண சபைக் கூட்டத்திலிருந்து முஸ்லிம காஙகிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

ஒற்றை ஆட்சிக்கு விசுவாசமாக நடந்து கொண்ட இந்த உறுப்பினர்கள் இன்னமும மாகாண சபை உறுப்பினர்களாகவே இருக்கின்றனர்.

ஆயினும மாகாண சபை உறுப்பினர்களாகிய எமக்கும எமது மெய்ப்பாது காவலர்க

[2ஆம பக்கம பார்க்க],

**ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி**

நுவரெலியா மாவட்டத்தில்

# உருளைக் கிழங்கு

# பயிர்ச்செய் கை பாதிப்பு

## வேகமாக பரவும் வைரஸ் நோயினால்

கொழும்பு மே 6

வைரஸ் நோயொன்றினால் நுவரெலிய மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நோய் வேகமாகப் பரவுவதால் விவசாயிகள் பெரும நட்டத்தை அடைந்து வருகிறார்கள்.

நுவரெலியா மாவட்ட மரக்கறி விவசாயிகளின் பிரதான வருவாய் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மூலமே கிடைத்து வருகின்றது.

உருளைக்கிழங்கு நடப்பட்டு சில வாரங்களில் கிழங்குச் செடியின் இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் தண்டுகளும மஞ்சள் நிறமாகின்றன.

பின்னர் கிழங்கோ அல்லது செடியோ வளர்வதில்லை. அவ்வாறான பற்றைகளில் கிழங்குகள் மிகவும சிறிதாகவே காணப் படுகின்றன.

இதன் காரணமாக பதுளை மாவட்ட விவசாயிகள் நுவரெலியா மாவட்ட விதை உருளைக் கிழங்கு வகைகளை விலைக்கு வாங்க விருமபுவதில்லை என, தெரிய வருகிறது.

இந்த நோய் சமபந்தமாக ஆராய்ச்சி நடத்தி கிழங்குப் பயிர்ச் செய்கையைப் பாதுகாக்க கமநலத் திணைக்களம தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

நோய் பரவியுள்ள தோட்டங்களில் இருந்து மண்ணும், நோயினால் பாதிக்கப்பட்ட கிழங்குகளும பேராதனையில் உள்ள கமநல ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(ல—ற)

## இந்திய மீனவ...!

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தலைமன்னார் வரும— இலங்கை, இந்திய மீனவர்களிடையே எழுந்துள்ள கசப்புணர்வை நீக்கும வகையில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்துவர்—

சில மீனவர்கள் இலஙகைக் கடற் பிராந்தியத்தில் அத்துமீறி நடந்து கொள்வதால் எல்லா மீனவர்களையும தண்டிக்க முனைவது தவறு என்பதை தமது பேச்சுவார்த்தைகளின் போது இந்திய மீனவர் குழு விடுதலைப் புலிகளிடம எடுத்துரைக்கும—

வட பகுதி மீனவர்களும இராமேஸ்வர மீனவர்களும இவ்வளவு காலமாக எவ்வித பிரச்சினைகளுமின்றி இரு நாடுகளையும இணைக்கும கடற் பிராந்தியத்தில் மீன்பிடித்து வந்துள்ளனர், இந்திய கடல் எல்லைக்குள் வந்து வட பகுதி மீனவர்கள் மீன் பிடித்தும வந்துள்ளனர் என்று இராமேஸ்ரம வேர்கோட்டு மீன்பிடிச் சஙகச் செயலாளர் பி அருளானந்தன் பெர்னாண்டோ கூறியுள்ளார்—

சமீபத்தில் விடுதலைப் புலிகள் 57 இராமேஸ்வர மீனவர்களை கூட்டிச் சென்று மூன்று நாட்களின் பின்னர் விடுதலை செய்தார்கள்—

சில இந்திய மீனவர்கள் இலஙகைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததோடு இலஙகை மீனவர்களைத் தாக்கவும செய்தனர்— இதனாலேயே மீனவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப் பட்ட இந்திய மீனவர்களிடம விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைக்கான காரணத்தைத் தெரிவித்தனராம—

[ண—032]

இன்றைய



### பயணிகள் பிரார்த்தனையில்

ஆஸ்திரேலியாவுக்கான முதல் எயர் லங்கா விமானம புறப்படு முன்னர் அதன் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம—

மாகாண மட்டத்தில் ஜீ சி ஈ உயர்தர வகுப்பில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 10 மாணவர்களும இந்த விமானத்தில் பயணம மேற்கொண்டனர்.

(ல)

## அம்பாறையில் அரசாங்க அலுவலகங்கள் இங்கிலர்...

## புத்தளம் தொகுதி அபிவிருத்திக்கு

### உதவுவதாக அஸ்வர் உறுதி

தொழும்பு மே 6

மக்கள் எமமை நாடி வரும வரை பார்த்திராமல் மக்களைத் தேடிச் சென்று நாம பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டுமென்றே ஜனாதிபதி எமக்கு உத்தர விட்டுள்ளார்.

இந்த வகையில் புத்தளம தொகுதியின் வளர்ச்சிக்கு என்னாலான சகல உதவிகளையும நான் புரிவேன்.

முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் எ எச் எம அஸ்வர் இவ்வாறு கூறினார்.

புத்தளம தொகுதியில் பல் வேறு கிராமங்களுக்கும உத்தியோகபூர்வ விஜயம மேற்கொண்ட அல்ஹாஜ் அஸ்வர் இரு தினஙகளைப் புத்தளத்தில் செலவிட்டு மக்களைச் சந்தித்து அளவளாவினார்.

புத்தளம தொகுதியில் கரமபை, தலுவ தெட்டபொல, மாமபுரி, நாவற்காடு நரக்களி பண்ணையடி, பூளச்சேனை, நுரைச் சோலை, திகழி, தலவில, குருஞ் சான்பிட்டி, கற்பிட்டி, விருதோட்டை, கடயமோட்டை, கன்னா முலை, நல்லன்தலுவ ஆகிய கிராமஙகளுக்கு அமைச்சரும, ஜனாப் எம எச் ஆமிட் எம பியும புத்தளம நகர சபைத் தலைவர் ஜனாப் பிஷ்ருல் ஹாபியும மற்றும அதிகாரிகளும விஜயம செய்தனர்.

கிராமஙகள் தோறும இவர்களுக்கும குதூகல வரவேற்பளிக்கப்பட்டது.

மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஹாஜி அஸ்வர் பொய்யான வாக்குறுதிகளை வழஙகாமல் இயலுமான தீர்வுகளைத் தாம பெற்றுக் கொடுப்பதாகவும அதிகாரிகள் தமது பணிகளை ஆற்றுவதில் திறமபட நடந்து கொள்ள வேண்டும என்றும கூறினார். (ல—007)

## கோட்டக் கல்வி காரியாலயம் நாளை முதல்

மடவளை மே 5

வத்தேகம கோட்டக் கல்விக் காரியாலயம நாளை 8ஆம திகதி முதல் இயஙக வுள்ளது.

கண்டி மாவட்டத்திலுள்ள பாத்ததும்பறை தேர்தல் தொகுதியில் வத்தேகம மகளிர் வித்தியாலயத்தில் மேற்படி கோட்டக் கல்விக் காரியாலயம நாளை திறந்து வைக்கப்பட உள்ளது.

மடுல்கலை, பன்வில, போன்ற பகுதிகளில் உள்ள பெருந் தோட்டப் பாடசாலைகள் இதனால் பெரிதும நன்மை அடையும என எதிர்பார்க்கப்படுகிறது. (ல—431)

## வெலிகமையில் திடீர் தீ விபத்து

கொழும்பு மே 6

திடீர் தீ விபத்தினால் 3 கடைகள் எரிந்து சேதமாகின.

வெலிகமையில் இந்த தீ விபத்து நடைபெற்றது.

பெரும மழையுடன் ஏற்பட்ட மின் ஒழுக்கினாலேயே கடைகள் தீப்பற்றியதாகக் கருதப்படுகிறது.

ரூபா 75 லட்சம வரை சேதம ஏற்பட்டதாகவும மதிப் பிடப்பட்டுள்ளது. (ல—007)

## சாயி சேவா சமிதி

### நம்பிக்கை பொறுப்பிலனை கூட்டிணைக்க சட்டவரைவு

கொழும்பு மே 6

பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா சமிதி நமபிக்கைப் பொறுப்பினைக் கூட்டிணைப் பதற்கான சட்டவரைவு ஒன்று விரைவில் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் படும.

இந்து கலாசார, சமய தமிழ் அலுவலகள் அமைச்சர் திரு பி பி தேவராஜ் இதனை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பார்.

1 பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் செய்தியையும, போதனைகளையும பரப்புதல்,

2 வேதஙகள், உபநிடதஙகள் சாத்திரஙகள் புராணஙகளின் அறிவைப் பரப்புதல்.

3 சகல மதஙகளினதும மிகச் சிறந்த நன்னெறி சார்ந்த கோட்பாடுகளை ஆராய்தல், அவற்றைப் பரப்புதல்.

4 அடிப்படைக் கோட்பாடுகளான சத்தியம தர்மம, சமா

## இந்திய பாக்...!

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அசைவற்ற இரு உடல்களை பாகிஸ்தானிய வீரர்கள் தூக்கிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது என இந்திய அதிகாரிகள கூறினர். இவர்கள் இறந்திருக்கலாம எனவும அவர்கள மேலும கூறினர்.

வடிக்கைக்கான காரணத்தைத் தெரிவித்தனராம்—

[ண—032]

# இன்றைய திரைகளில்

4 வது வாரம
ஜெஸிமா
[கிராண்ட்பாஸ்]
2-00, 6-00, 9-30

ரியோ
[கொமபுனித்தெரு]
(குளிரூட்ட ப்பட்டது)

கடைசி வாரம
திங்கள் முதல் வியாழன் வரை
காட்சி நேரங்கள்
2-15, 6-00, 9-00 மணி
வெள்ளி/சனி/ஞாயிறு
10-15, 2-15, 6-00, 9-00

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

5 வது வாரம
சமந்தா
(தெமட்டகொடை)
10-00, 2-00, 6-00, 9-30

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

## இராமகிருஷ்ண மிஷன் வெசாக் கொண்டாட்டம்

கொழும்பு மே 6

இராமகிருஷ்ணமிஷன் (இலநுகைக் கிளை) வெசாக் தினத்தை கொழும்பில் கொண்டாட இருக்கிறது.

எதிர்வரும 9 ஆம திகதி மாலை 6.30 மணிக்கு, கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் விசேட வெசாக் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் சநுகைக் குரிய மாபாலகம விபுலசேன மகா தேரர் அனுசாசனம வழங்குவார்.

(ல-கு)

## இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு

கொழும்பு மே 6

பமபலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் ரிசேர்வ் பொலீஸ் சப்இன்ஸ்பெக்டராகக் கடமை யாற்றி வந்த ஜனாப் கலீலுர் ரஹ்மான் பொலீஸ் இன்ஸ் பெக்டராகப் பதவி உயர்த் தப்பட்டுள்ளார்.

இவர் மருதமுனையை பிறப் பிடமாக கொண்ட ஜனாப் ரஹ்மான் செய்னுல் ஆப்தீன் தமபதிகளின் சிரேஷ்ட புதல்வ ராவார். (ல-மு)

## விமான விபத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

13 பேருமே மரணமானவர்கள் ஆவர்.

இயந்திரக் கோளாறே இந்த விபத்துக்குக் காரணம என்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்செய்தியை அகில இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பி யது. (ண-ழ)

# அம்பாறையில் அரசாங்க அலுவல்கள் சிங்களத்தில்

## தமிழ் முஸ்லிம்கள் அசௌகரியம்

## மு. கா. உறுப்பினர் மஜீத் முறைப்பாடு

கொழுமபு மே 6

அமபாறையில் கக்சேரி உட்பட அரசாங்க அலுவலகங் களில் அலுவல்கள் சிஙகள மொழியில் மேற்கொள்ளப் பட்டு வருவதால் அந்த மாவட்டத்தில் தமிழ், முஸ லிம மக்கள் பெரும அசௌ கரியஙகளை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முஸலிம காஙகிரஸ் உறுப்பினர் ஜனாப் ஏ எல் அப் துல மஜீத் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச் சர் திரு பெஸ்டஸ் பெரேரா விடம இப்படி முறைப்பாடு செய்துளார்.

இது தொடர்பாக ஜனாப் மஜீத திரு பெரேராவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

தமிழ் மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழஙகுப்பட் டுள்ளது:

ஒரு பிரஜை அவர் விருமபிய மொழியில் அரசாஙகத்துட னான தமது அலுவல்களை மேற் கொள்ள முடியும என அரசு கூறுகிறது.

ஆனால் இஙகு இந்த கூற்றுக்கு மாறாக கருமஙகள், நடை பெறுகின்றன.

அமபாறை மாவட்டத்தில் காணப்படும, இந்த குறைபாடு தொடர்பாக அரசாஙக அதிப ருககு பல முறை அறிவித்து உள் ளேன். ஆனால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை.

12 ஆண்டுகளாக தமிழ் மொழி அமுலாக்கல் அமைச் சொன்று இந்த நாட்டில் இயஙகி வருகிறது.

ஆனால் தமிழ் மொழி அரச கரும மொழியாக அமுலாவ தில்லை.

எனவே அந்த அமைச்சு ஒரு குழுவை அமைத்து தமிழ் மொழி அமுலாக்கலை கண்காணித்து வர வேண்டும.

அத்தோடு பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச் சர் என்ற ரீதியில் நீஙகள் இந்த விடயத்தில் தலையிட்டு அமபாறை மாவட்டத்தில் தமிழ் மொழியும சிஙகளத்தைப் போலவே அமுலாவதை உறுதி செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி ஜனாப் மஜீத தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ல-ற)

## மது அருந்தும்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

உலக நாடுகளுக்கு தேயிலை, றப்பர், தேஙகாய் போன்ற வற்றை மட்டுமல்ல, "புத்த தர்ம"த்தையும எஙகளால் வழஙக முடியும, வெளிநாட்டில் இருப்போர் எமது "புத்த தர்மம" வருமவரை காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

வெசாக் தினம தொடர் பான நிகழ்ச்சிகள், சர்வதேச தொலைக்காட்சி நிறுவனமான "சி என் என் வேர்ல்ட் ரிப் போர்ட்" மூலம உலக நாடுகள் அனைத்திற்கும காணப்படும.

பௌத்த மதம சிஙகளவர்க ளுக்கு மட்டும சொந்தமான தொன்றல்ல. உலகத்தில் உள்ள சகலருக்கும இது சொந்தமானது.

இவ்வாறு தகவல்துறை ராஜாஙக அமைச்சர் கூறினார்.

(ண-ழ).

## முஸ்லிம்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும வழஙகப்பட வேண்டிய இரண்டு மாதஙகளுக்குரிய சமப ளம வழஙகப்படவில்லை.

இந்த விடயம தொடர்பாக மாகாண சபையின் செயலாள ருக்கும, மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கும கடிதம எழுதினோம, ஆயினும பலன ஏதும இல்லை.

மாகாண சபையின் முஸ்லிம காஙகிரஸ் உறுப்பினர் ஜனாப் எம வை எம மன்சூர் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட் டார்.

மற்றும பல முஸ்லிம காங ரஸ் உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதன் காரணமாக மாகாண சபை உறுப்பினர்களாகிய நாம எமது பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நாம எமது பகுதிக ளுக்குச் செல்லக் கூடிய சூழலை உருவாக்குவதுடன் எமது பாக் கிச் சமபளத்தை வழஙகவும நடவடிக்கை எடுக்கவும.

இப்படி அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.

(ண-ற)

தாக இருந்தது. என இந்திய அதிகாரிகள கூறினர். இவர்கள் இறந்திருக்கலாம எனவும அவர்கள மேலும கூறினர்.

இதேவேளை காஷ்மீர் தீவிர வாதிகளுடன் ஏற்பட்ட மோதல் களில் 11 பேர் கொல்லப்பட்ட தாக இந்திய பொலீஸார் அறி வித்தனர்.

(ண-ந)

அவற்றைப் பரப்புதல்.

4 அடிப்படைக் கோட்பாடுக ளான சத்தியம தர்மம, சமா தானம, அன்பு ஆகியவற்றைப் பரப்புதல்,

ஆகியன இந்த நமபிக்கைப் பொறுப்பினை கூட்டிணைப்பு தற்கான நோக்கஙகளாகும.

(ல-கு).


## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அரசாஙக தட்டெழுத்தாளர் சேவையின் 11 ஆம வகுப்பின் "ஆ" பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை (ஆஙகிலம) — 1990

என்- 331

1990 ஆம ஆண்டு மே மாதம 12 ஆந் திகதி நடை பெறவிருக்கும மேற்குறிப்பிட்ட பரீட்சைக்கான பிரவேசப் பத் திரஙகளும நேர அட்டவணைகளும சகல பரீட்சார்த்திகளுக் கும அஞ்சல் செய்யப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவுறுத் தப்படுகின்றனர்-

ஆதர் வெதமுல்ல
பரீட்சை ஆணையாளர்

5/15/121
மலே வீதி, கொழுமபு—02-
1990 மே 02 ஆந் திகதி

817



## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கல்வியியல் பட்டப் பின் உள்ளகக் க்ல்வித் தேர்வுப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்காக பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்க்ான பரீட்சை — 1990/1991

என்- 333

1990 ஆம ஆண்டு மே மாதம 12 ஆம திகதி நடைபெற வுள்ள மேற்படி பரீட்சைக்கான பிரவேச அட்டைகள் நேர அட்டவணை என்பன சகல பரீட்சார்த்திகளுக்கும தபால் மூலம அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்-

ஆதர் வெதமுல்ல
பரீட்சை ஆணையாளர்

8/8/6/90,
இலஙகைப் பரீட்சைத் திணைக்களம,
மலே வீதி, கொழுமபு-02-

825

# தலை முழுகாம முத்தெடுக்க வளைகாப்பு விழா

## ராதிகாவுக்கு நடந்தது!

காலை வேளையில் வீட்டின் விசாலமான நடு கூடத்தில் மணக்கோலத்தில் நடிகை ஒருவர் அமர்ந்திருந்தார். கை குலுங்க தங்க, வைர வளையல்கள், கழுத்திலே வைரமணி மாலைகள்.

அந்த நடிகை (ராதிகா) புன்சிரிப்பு தவழ கைகளை நீட்ட, அழகு தோழிகள் இருவர் சந்தனம தடவி, பொட்டிட்டு "வாழ்க! வாழ்க! சுகமாக பெற்று வாழ்க!" என வாழ்த்தவும, நிருபரின் சந்தேகப் பார்வை ராதிகா மீது விழுந்தது.

ராதிகாவுக்கு அன்று திருமணம அல்ல. வளைகாப்பு விழா. கர்ப்பிணி பெண்ணுக்கு உரிய "மேக்கப்"புடன் நாற்காலியில் அமர்ந்திருந்த ராதிகாவின் முன்னே 18 பருவக் குமரிகள் 3 வரிசையாக நின்று "எங்க மகதான் தங்க மகதான் தலை முழுகாம முத்து எடுப்பா பெத்து எடுப்பா..." என்ற பாடலுக்கு ஆட்டம ஆடி முடிக்கவும, எழுந்து வந்தார் ராதிகா!

உண்மையிலேயே எனக்கு வளைகாப்பு கிடையாது. கிடையவே கிடையாது. அப்படியே உண்மையில் அந்த நாள் வரும



ராதிகா

போது இப்படியா நாற்காலியில் இருப்பேன். துள்ளிக் குதித்து நானும சேர்ந்து ஆடுவேனே!

இது நான் இப்படி இருந்தால் எப்படி இருக்கும?" என்று கற்பனை செய்வது போல வரும காட்சிதான்" என்று சொல்லி சிரித்தார்.

ராதிகாவின் வளைகாப்பு காட்சி அன்று படமானது அனிதா சினி கிரியேசன்ஸ் "பட்டணந்தான் போகலாமடி" என்ற படத்துக்காகத்தான்!

ராதிகாவுக்கு வளைகாப்பு என்றால் அந்த "பலன்" கொடுத்த மாப்பிள்ளை ஒருவர் இருக்க வேண்டும அல்லவா!

மாப்பிள்ளை கோலத்தில் அடுத்த "டேக்"குக்கு ரெடியாக ரகுமானும வந்திருந்தார். இந்த ஜோடியுடன் அங்கே புதுமண தமபதி போல இன்னொரு ஜோடியும காட்சி தந்தது: அதுதான் நிழல்கள் ரவி - ரூபினி ஜோடி. நிழல்கள் ரவியின் "மேக்கப்" ஒப்பனை ரசித்து சிரிக்கத்தக்கது. உச்சிக்குடுமி, காதிலே கடுக்கன், கழுத்தை இழுத்து மூடிய நீண்ட தொள தொள சட்டை, நாலுமுழ வேட்டி.

"பட்டணந்தான் போகலாமடி"யில் நிழல்கள் ரவி படிக்காத கிராமத்து இளைஞனாக, ரூபினி படித்த பெண்ணாக நடிக்கிறார்கள். இவர்கள் ஒரு கல்யாணம கட்டிக் கொண்ட ஜோடி.

இன்னொரு ஜோடிதான் படிக்காத ராதிகா - படித்து விவசாய வேலையில் முமமுரமாக ஈடுபட்டுள்ள ரகுமான்.


கிராமத்து பண்பை, பழக்க வழக்கங்களை எடுத்து வைக்கும கதை அமசம உள்ள "பட்டணந்தான் போகலாமடி" படத்தின் திரைக்கதை, டைரக்ஷன்: சி பி கோலப்பன். இளைஞரான இவர் நமபிக்கை, நாணயத்துக்கு உரியவர்களில் ஒருவர் என்று பட உலகில் பெயர் எடுத்தவர்.

20 படங்களில் துணை அசோசியேட் டைரக்டராகப் பணி புரிந்து "தென்பாண்டி சீமையிலே" என்ற படத்தை முதல் முறையாக டைரக்ட் செய்தவர்.

ரகுமான் – ராதிகா, நிழல்கள் ரவி – ரூபினி ஜோடி நடித்த காட்சிகள் தொடர்ந்து படமாகிக் கொண்டிருக்க, கே எஸ் செல்வராஜின் காமிராவும ஓயாது சுழன்று கொண்டிருந்தது. படப்பிடிப்பில் இந்த இரு ஜோடிகளின் பிரச்சினைகளை சுமுகமாக நகைச்சுவையுடன் தீர்த்து வைக்கும வி கே ராமசாமியும கலந்து கொள்ள படப்பிடிப்பில் ஒரே கலகலப்பு.

ஆடல், பாடல், கலகலப்பு என அன்று நடுப்பகல் வரை அமர்க்களமாக நடந்தது, "பட்டணந்தான் போகலாமடி" படப்பிடிப்பு.

(இ-10)



(ஆண் - பெண்) இருவருக் கிடையே பழக்கம ஏற்பட்ட பின் உறக்கம வராது. நெருக்கம ஏற்பட்ட பிறகு மனக் கலக்கமாவது தீராதா என்று தான் நெருங்கிப் பார்க்கிறார்களோ? (ராஜசேகர் – சசிகலா) (படம: "நான் மந்திரியானால்")

# தோட்டத்துறை மக்கள் மயமாகாது

## —ரஞ்சன் தகவல்

கொழுமபு, மே 6

தோட்டத்துறை எந்த சந்தர்ப்பத்திலும தனியார் துறையினரிடம ஒப்படைக்கப்படவோ அல்லது மக்கள்மயப்படுத்தவோபட மாட்டாது பொன் முட்டை இடும வாத்தை ஒரே நாளில் கொன்று போட அனுமதிக்க முடியாது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு கூறினார்—

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அண்மையில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தேயிலை விற்பனை நிலையத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்—

அங்கு அமைச்சர் உயர் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில் மேலும கூறியதாவது;—

உலக வங்கி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும பெருந்தோட்டங்களை தனியார்மயப்படுத்துமபடி ஆலோசனை கூறவில்லை மாறாக தனியார் மயப்படுத்துவதனால் ஏற்படும பாதிப்புகள் தொடர்பாக உலக வங்கி எச்சரிக்கை செய்துள்ளது—

அண்மைக் காலங்களில் நிர்வாக முறையில் ஏற்பட்ட சீர்குலைவுகளே உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்துள்ளன.

இப்பொழுது நிர்வாக முறை மாற்றப்பட்டுள்ளதால் கடந்த சில வாரங்களில் உற்பத்திச் செலவு பெருமளவு குறைந்துள்ளது தெரியவந்துள்ளது—

இன்று தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும ஒரு நிறுவனமாக பெருந்தோட்டத்துறை இயங்குகின்றது—

இதனை தனியார் துறையினரிடம ஒப்படைத்தால் அது நாட்டின் பொருளாதாரத்திற்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும—

எனவே, ஒவ்வொரு தோட்ட நிர்வாகிகளும தத்தமது பணியை சிறப்புடன் செய்ய வேண்டும— பொறுப்பற்ற முறையில் செயல்படும நிர்வாகிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும—

(ெ-ய)

# இந்திய பாஸ்போர்ட் எடுத்த 80,000 பேரையும் இலங்கை பிரஜைகளாக்க வேண்டும்

## தொழிலாளர் விவ. விடுதலை முன்னணி

கொழுமபு, மே 6

இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) எடுத்த 80 ஆயிரம பேரையும இந் நாட்டுப் பிரஜைகளாக்க வேண்டும. தொழிலாளர் விவசாய விடுதலை முன்னணி அரசுக்கு இப்படி கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய தீர்மானமொன்று, பூண்டுலோயா நகரசபை மண்டபத்தில் நிகழ்ந்த மே தின விழாவில் நிறைவேற்றப்பட்டது. மேற்படி முன்னணியின் உபதலைவர் திரு கே ஏ ஜெயசிங்க இதற்குத் தலைமை வகித்தார்.

இக்கோரிக்கையுடன் மேலும பல தீர்மானஙகளும இங்கு நிறைவேற்றப்பட்டன, இங்கு நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள் வருமாறு—

மலையகத்தில் பாடசாலை வசதிகளைப் பெருக்கவும், உயர் கல்வி பெறவும வசதி செய்ய வேண்டும.

ஜனநாயக அரசியல் நடவடிக்கைக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தவும, தோட்டத் தொழிலாளருக்கு உடனடியாக மாதச் சமபளம வழங்கவும நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்டக் காணி நிலஙகளை பகிர்ந்தளிக்கும போது தோட்டத் தொழிலாளருக்கு முன்னுரிமை வழஙக வேண்டும.

குடியேற்றம என்ற போர்வையில் மலையக மக்களை சிறுபான்மையினராக்க வேண்டாம.

அத்துடன் படித்த மலையக இளைஞர், யுவதிகளுக்கும வேலை வாய்ப்பு வழங்க வேண்டும.

மலையகத்தில் தொழிற்பேட்டைகளையும, ஆலைகளையும உருவாக்கி, பொருளாதாரத்தை பெருக்க வழி செய்ய வேண்டும. மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும.

தோட்டத் தொழிலாளரும நிர்வாகத்தில் பஙகு ஏற்க வழி செய்து ஊழல், நட்டம ஆகிய வற்றைத் தவிர்க்க வேண்டும.

(இ-ங)

## சித்திரை பௌர்ணமி தேர்த் திருவிழா

கொழுமபு, மே 6

கணடி மகியாவை ஸ்ரீ முத்துமாரியமமன் கோவிலின் வருடாந்த சித்திரை பௌர்ணமி தேர்த்திருவிழா ஒன்பதாம திகதி புதன்கிழமை ஆரமபமாகும.

1௯ஆம திகதி வரையிலும ஆலயத்தில் திருவிழா நிகழ்ச்சிகள் இடமபெறும. (ஐ-455)

## சுவிட்சர்லாந்தில்

பௌாட் மேகின


## புனித ஹஜ் யாத்திரை 1990

புனித ஹஜ் யாத்திரையில் பல வருட அனுபவமுள்ள வழிகாட்டிகளின் உம்ருல் குரு டிரவல்ஸ் இமமுறை புனித ஹஜ் சேவையைச் செய்ய முன்வந்துள்ளது—

* குறைந்த கட்டணத்தில் சௌகரியமான விமானப்பயண ஏற்பாடு
* புனித கஃபா சரீபுக்கு மிக அருகாமையில் குளிரூட்டப்பட்ட தங்குமிட வசதியும போக்குவரத்து பஸ் சேவையும—
* மினாவில் (Air Cooler) வசதிகளும செய்யப்பட்டுள்ளன—
* மிகத் தரம வாய்ந்த உணவு வசதி



(ஆண் - பெண்) இருவருக் கிடையே பழக்கம ஏற்பட்ட பின் உறக்கம வராது. நெருக்கம ஏற்பட்ட பிறகு மனக் கலக்கமாவது தீராதா என்று தான் நெருங்கிப் பார்க்கிறார்களோ? (ராஜசேகர் - சசிகலா) [படம்:"நான் மந்திரியானால்") (இ-10)

“முதுமலை காட்டில்”

# புதுமுகநடிகைமீது துப்பாக்கி சூடு!

## “மலைச்சாரலில்” திடுக்கிடும் காட்சி

புதுமுக நடிகையை புதுமுக நடிகர் துப்பாக்கியால் சுட்டார்.

முதுமலை காட்டுப் பகுதியில் மலை ஜாதியினர் வாழ் மன சகுடி என்ற கிராமத்திற்கு புதிதாக வந்தான் இளைஞன் விஜய்.

அந்த கிராமத்தின் தலைவன் கரியாவின் தஙகை சுட்டி, மற்றும அவளது தோழிகள் மூலிகை பறிக்க காட்டிற்கு வந்தார்கள். கோட்டும சூட்டுமாய் எதிரில் பயந்து நின்ற இளைஞன் விஜயைக் கண்ட அவர்கள் அவனை பயமுறுத்த திட்டமிட்டனர்.

உடனே செடிகளுக்கு பின்னால் ஓடி ஒளிந்து கொண்டு கிளியோ பிலியோ கிளியோ பிலியோ என்றும சிஙகம புலி யானை போலவும கத்தினார்கள்.

இந்த சத்தத்தை கேட்டு பயந்து நின்ற இளைஞன் விஜய் திடீரென்று கைத் துப்பாக்கியை எடுத்து சத்தம வந்த திசையை நோக்கி சரமாரியாக சுட்டான்.

இதில் சுட்டியின் உடலில் குண்டு பாய்ந்தது. அவள் அலறியபடி தரையில் சாய்ந்தாள்.

இப்படியொரு திடுக்கிடும காட்சி “மலைச்சாரல்” என்ற படத்தில் இடம பெறுகிறது.

முதுமலை காட்டில் படமான இக்காட்சியை தஙகராஜ் ஒளிப்பதிவு செய்ய கதை, திரைக்கதை எழுதி ராஜன் டைரக்ட் செய்தார். முராரி இசை அமைக்கிறார். வைரமுத்து பாடல்கள் எழுதுகிறார்.

இதில் இளைஞன் விஜய்யாக புதுமுகம ரமேசும், சுட்டியாக புதுமுகம சீமாவும நடித்தனர்.

மற்றும சரத்பாபு, சின்னி ஜெயந்த், திரை நீதி செல்வம எம எல் ஏ மல்லையா கீதா காந்திமதி உட்பட பலர் நடிக்கின்றனர். (இ-10)

## கார்த்திக் சம்பளம்

கார்த்திக் சமபளத்தை மிக அதிகமாக உயர்த்திவிட்டார் ஒரு படத்துக்கு 12 லட்சம ரூபா கேட்கிறார்- 10 லட்சம கொடுத்தால் வாஙகிக் கொள்கிறார்-

“சமபளத்தை விட கார்த்திக்கிடம கதை சொல்லி சம்மதம பெறுவது ரொம்பக் கஷ்டம. கதை சொல்வதற்கு மட்டும நான்கு நாட்கள் மெக்கெடுப்பார் என்கிறார் ஒரு தயாரிப்பாளர்- (இ-10)

என அன்று நடுப்பகல் வரை அமர்க்களமாக நடந்தது. “பட்டணந்தான் போகலாமடி” படப்பிடிப்பு. (இ-10)

## ராதாவுக்கு படவாய்ப்புகள்

“மீனாட்சி திருவிளையாடல்” படத்துக்குப் பின் ராதாவுக்கு சில தமிழ்ப் பட வாய்ப்புகள் வந்து இருக்கிறது-

தெலுஙகுப் படஙகளில் நடிக்கும அவர் மீண்டும தமிழுக்கு திருமபுவார் என்று எதிர்பார்க்கலாம- (இ-10)

## தினபதி சினிமா

## பச்சையம்மாள் கிரியேசன்ஸ் ‘நம்ம ஊர்க்காரன்’

பச்சையமமாள் சினி கிரியேசன்ஸ் “நமம ஊர்க்காரன்” படம வளர்ந்து வருகிறது.

முரளி, லியாகத் அலிகான், ரேகா, தேவிபிரியா, சித்ரா - ராஜீவ் - நிழல்கள் ரவி - கவுண்டமணி - செந்தில் நடிக்கிறார்கள். ராமசுப்பு ஒளிப்பதிவை கவனிக்க, கஙகை அமரன் இசை அமைக்க, எம என் ஜெய்சுந்தர் கதை, திரைக்கதை, வசனம எழுதி டைரக்ட் செய்யும படம “நமம ஊர்க்காரன்”. (இ-10)

டும்.

## சுவிட்சர்லாந்தில் புளொட் மேதின ஊர்வலம்

கொழுமபு, மே 6

சுவிட்சர்லாந்தில் சூரிச் நகரில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும (புளொட் சுவிஸ்கிளை) ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும (டி பி எல் எப் சுவிஸ்கிளை) கலந்து கொண்டன-

இவ் ஊர்வலத்தில் சுவிட்சர்லாந்தில் உள்ள பெருமபான்மையான தொழிற்சஙகஙகளும இடதுசாரி கட்சிகளும வெளிநாட்டு அமைப்புகளும கலந்து கொண்டன-

ஊர்வலத்தில் சென்றோர் பதாதைகளை ஏந்தியும சுலோகஙகளை கோஷித்தும சென்றனர்- (இ)

## வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 6

ஸ்ரீ ல சு க களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு திலக் கருணாரத்ன உட்பட மூவருக்கெதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு எதிர்வரும ஜூன் மாதம 6 ஆம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது-

இவ்வழக்கு கடந்த 26 ஆம திகதி கொழுமபு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேல் நீதிமன்ற நீதிபதி திரு ஏ எல் எம பர்னாந்து மேற்படி வழக்கை ஒத்திவைத்தார்-

வழக்குத்தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி திரு அசோக்க வீரசூரிய ஆஜராகி இருந்தார்- (ஐ-டீ)

வரத்து பஸ் சேவையும்-

* மினவில் (Air Cooler) வசதிகளும செய்யப்பட்டுள்ளன-
* மிகத் தரம வாய்ந்த உணவு வசதி
* முக்கிய்யா அரபிக் கல்லூரி பணிப்பாளரும தலீபதல் குலபாவுமான மௌலவி அல்ஹாஜ எம எம ஸுஹ்றுதீன் ஆலிம அவர்களின் தலைமையில் பல வருட அனுபவமுள்ள மௌலவிமார்களின் வழிகாட்டல்-
* ஹஜ்ஜாஜிகளின் பாஸ்போட், வீஸா, வெளிநாட்டுச் செலாவணி உட்பட எல்லாப் பிரயாண ஏற்பாடுகளையும உடனுக்குடன் கவனிப்பதற்கான ஏற்பாடுகள்
* மக்கா, மதீனு, மினா, அரபா, முஸ்தலிபா ஆகிய புனித இடஙகளைத் தரிசித்தல்

எமது கட்டணம் 40,909/- விமான டிக்கட்

(குர்பான் தவிர்ந்த)

உஙகள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்-

உம்முல் குரு டிரவல்ஸ்

(முஸ்லிம சமய கலாச்சார இலாகாவால் அஙகீகரிக்கப்பட்டது)

143 கிராண்ட்பாஸ் ரோட்,
கொழுமபு—14-
தொலைபேசி 27460/547679

Al-Haj A M N NASEER
Ummul Kura Travels
143. Grandpass Road,
Colombo — 14
Tel: 27460 / 547679

Mr M H M RIFKI HUSSAIN
107, Bloemendhal Road,
Colombo — 14
Tel: 547679

Al-Haj SHIRAZ JALEEL
Director
City Travels (Private) Ltd,
S—46, Central Super Market
Colombo — 11
Tel: 28551 / 437266 Res: 716093

Moulavi Al-Haj M H M AWN
76 & 78, Main Street,
Galle,
Tel: 09—32048

Al-Haj A A A HAKEEM &
Al-Haj M J M NIYAS
Ruhunu Rice Mill,
Navinna, Uluvitike,
Galle.

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 க்திர் 4477
—1990 மே 7—

# அ.தி.மு.க.வில் மீண்டும் ஒரு பிளவு ஏற்படக் கூடாது!

## கிருஷ்ணசாமி வலியுறுத்து

அ தி மு க வில் மீண்டும பிளவு ஏற்பட்டு விடக் கூடாது" என்று முன்னாள் அமைச்சர் கே ஏ கிருஷ்ணசாமி கூறினார்-

சேலம தோட்டை மைதானத்தில் அ தி மு க சார்பில் கண்டன பொதக்கூட்டம நடந்தது- அதில் முன்னாள் அமைச்சர் கே ஏ கிருஷ்ணசாமி பேசியதாவது—

கண்டன சைக்கிள் பேரணி எனக்கு நல்ல நமபிக்கையை தருவதாக இருந்தது-

அ தி மு க உறங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறுபவர்களுக்கு இந்த எழுச்சிமிக்க சைக்கிள் பேரணி நல்ல பதிலாக அமைந்த இருந்தது-

நாம கூட நமது (அ தி மு க) பலத்தை சற்று குறைத்து மதிப்பிடுகிறோம- ஆனால் கருணாநிதி நமது புலத்தை நம்மை விட நன்கு அறிந்த இருக்கிறார்-

தமிழகத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்ட தி மு க அரசு டெல்லியின் பின்னணியில் நிற்கிறது- சட்ட சபைத் தேர்தலிலும அதற்கு பின் நடந்த நாடாளுமன்ற தேர்தலிலும தொகுதி வாரியாக தி மு கவுக்கு கிடைத்த குறைந்த ஓட்டுகளின் கணக்கீடு கலைஞரை கலக்கி உள்ளது-

இதற்கு யார் காரணம என்று கருணாநிதி யோசித்துப் பார்க்கும போத ஜெயலலிதாவின் வலிமையை புரிந்த கொண்டார்-

அதனால் அவரை பலவழிகளிலும சிறுமைப்படுத்தவும அதற்கு மேலும தொல்லை கொடுக்கவும முனைந்தார்-

அவரை விட்டால் கலைஞரை எதிர்க்க தமிழ்நாட்டில் யாருமே இல்லை- அப்படிப்பட்ட தலைவிக்கு கீழ் இருப்பது நமக்கு நன்மையை தரும-

இதில் நான் மூத்தவன் எனக்கு நிறைய தகுதி இருக்கிறது என்று தகுதிகளை வைத்து செயல்பட முனையக் கூடாது- தகுதி பார்த்து நாம தயங்கினால் மீண்டும நமக்கு நஷ்டமே வரும்-

கலைஞரை வீழ்த்த முயலும ஜெயலலிதாவை வலுப்படுத்த வேண்டும-

கட்சியில் விசுவாசத்தை இழக்க வேண்டாம- இதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன- அதை நாம தவிர்க்க வேண்டும-

நமது கட்சியின் சூப்பர் எம ஜி ஆராக ஜெயலலிதா இருக்கிறார்- 6 மாத குழந்தையான அ தி மு க திண்டுக்கல்லில் தி மு க விற்கு பலத்த அடியை கொடுத்தது- இப்போது அ தி மு கவிற்கு 18 வயதாகி உள்ளதை தி மு கவினர் மறந்துவிடக் கூடாது-

இவ்வாறு கே ஏ கிருஷ்ணசாமி கூறினார்- (ம—10)

## மின் கட்டண பாக்கி அறவீடு

இலங்கை மின்சார சபை அனுப்பி வைக்கும சிவப்பு நோட்டீஸ்களில் தவறுகள் காணப்படுகின்றன என்று பாவனையாளர்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள்.

மின்சார சபையின் தவறுகளினால், தாம பெரும சிரமத்திற்கும சிக்கலுக்கும ஆளாவதாகவும அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

மின்சார சபை கட்டண நிலுவைப் பாக்கி தொடர்பாக சிவப்பு நோட்டீஸ்களை அனுப்பி வைக்கிறது. அது காலக்கெடுவையும விதிக்கிறது.

கட்டணப் பாக்கியை கட்டத் தவறும பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும என சிவப்பு நோட்டீஸ்களில் எச்சரிக்கப் படுகிறது.

பாவனையாளர்களிடம இருந்து கட்டணப் பாக்கிகளை துரித கதியில் அறவிடுமபடி மின்சார சபைக்கு உலக வங்கி அறிவுறுத்தியிருக்கிறது.

கட்டணங்களை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுப்பது மின்சார சபையின் கடமை. அதில் தப்பில்லை.

ஆனால் தவறுகளும பிழைகளும நிறைந்த பட்டியல்களை அனுப்பி விட்டு, பாவனையாளர்களைக் கஷ்டப்படுத்துவது தான் தப்பு.

பாவனையாளர்கள் மின்சார சபையின் குறைபாடுகளை பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்கள்—

— ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டணத் தொகையை,

## குறைந்தளவு ஆசனங்களால் மக்கள் சிரமம்

திருகோணமலை, மே 5

திருகோணமலைக்கும கொழும்புக்கும இடையிலான புகையிரத சேவையில் மிகக் குறைந்தளவு ஆசன எண்ணிக்கையுள்ள புகையிரதப் பெட்டிகளே சேவைக்கு விடப்படுகின்றன-


இதனால் பொது மக்கள் பெரும சிரமத்திற்குள்ளாகின்றனர்-

மேற்படி சேவையில் கடந்த காலங்களில் உறங்கு ஆசனம உட்பட ஏழு பெட்டிகள் சேவைக்கு விடப்பட்டு வந்தனவாம-

அண்மையிலிருந்து சேவை கொழும்புக்கும திருகோணமலைக்கும ஆரமபிக்கப்பட்டிருந்தும மூன்று பெட்டிகளே சேவைக்கு விடப்படுகின்றனவா-

இதனால் பயணிகள் பெரும கஷ்டத்துக்கு உள்ளாகின்றார்கள் என்றும இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும என்று பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது- [ஜ—287]

## அன்னதான மகோற்சவம்



## திருத்தப்படாத மத்ரஸா

இண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவின் "ஆயிலியடி" கிராமத்தில் திருத்தப்படாத

இதனால் இப் பகுதி மக்கள் நாளாந்த ஐவேளை, கடமைகளையும, குர்ஆன் மத்ரஸா வகுப்

## ஒரு முஸ்லிம் முஸ்லிமாக வாழ வேண்டும்

### — வித்தியாலய அதிபர்

பாணந்துறை, மே 5

பாடசாலை சமயப் பாடத்திட்டத்தில் இல்லாத பல விடயங்கள் அஹதியா வகுப்புகளில் புகட்டப்படுகின்றன ஒரு முஸ்லிம முஸ்லிமாகப் பிறந்து விட்டால் போதாது- முஸ்லிமாக வாழ்ந்து முஸ்லிமாக மரணிக்க வேண்டும-

மேற்கண்டவாறு பாணந்துறை எலுவிலை அஹதியாப் பாடசாலையின் இரண்டாம் தவணைப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றிய எலுவிலை அலவியா முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எம ஐ எம ஸரூக் கூறினார்-

வயக்கடை ஜும்ஆப் பள்ளிவாசல் கதீப் மௌலவி எஸ் எச் செய்னுதீன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பொரளை அஹதியா அமைப்பாளர் அல்ஹாஜ் சிப்லி ஹாஷிம பேசும்போது;-

மாணவர்களின் பரிசளிப்பு விழாக்களில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும அவசியமாகும- முஸ்லிம்களிடையே வீரமும உண்மையும, இஸ்லாமிய உணர்வுமிக்க பரம்பரை உருவாக வேண்டும்" என்றார்-

இவ் விழாவில் வயக்கடை ஜும்ஆப் பள்ளிவாசல் தர்ம கர்த்தா சபை உறுப்பினர் ஜனாப் எம ஏ எம ...ல். அகில இலங்கை அஹதியா இயக்கப் பொதுச் செயலாளர் அல்ஹாஜ் ஏ எல் எம அன்வர் ஆகியோரும உரையாற்றினர்- [ஜ—248]

## சிங்கள — தமிழ் — முஸ்லிம் மக்கள் இன, மத பேதமின்றி வாழ்வது அவசியம்

## செய்தித் திரட்டு

### சுகாதார நிலையம்

புங்குடுதீவு, மே 5

புங்குடுதீவில் உள்ள ஊரதீவு கிராமத்தில் கிராமோதய சுகாதார நிலையமொன்று விரைவில் அமைக்கப்படும.

இதன் கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் தற்போது ஒப்பந்தகாரர்களிடமிருந்து யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளன.

இமமாதம 27ஆம திகதி காலை 10 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படுமெனவும அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ—240)

### நீரில் மூழ்கி மரணம்

தெல்தெனிய, மே 5

நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்காக விக்டோரியா நீர்த்தேக்கப் பகுதிக்கு அதிகாலை இரண்டு மணியளவில் நீராடச் சென்ற பள்ளி இளம மாணவி ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

இச்சமபவம தெல்தெனிய பொலீஸ் பிரிவைச் சேர்ந்த கும்புக்கந்துறை - அமபகஹலந்த எனும இடத்தில் நிகழ்ந்துள்ளது, (ஜ—289)

### தங்க நகைகள் அபகரிப்பு

கொழும்பு, மே 6

வீட்டார் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளை வீட்டு வேலைக்காரி அங்கிருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார்

இத்துணிகர சமபவம மொரட்டுவை பகுதி வீடொன்றில் இடம பெற்றது.

இக்கொள்ளைச் சமபவம தொடர்பாக மொரட்டுவ பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தினர். (ஜ—வ)

களை பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்கள்—

— ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டணத் தொகையை, நிலுவைப் பாக்கியில் இருந்து கழிக்கத் தவறுதல்.

— சிவப்பு நோட்டீஸில் பிழையான கட்டணத் தொகை குறிப்பிடப்பட்டிருத்தல்.

— மின்மானி கணிப்பில் தவறு.

— மாதப் பட்டியல்களை அடுக்கடுக்காக சேர்த்து வைத்துவிட்டு ஒன்றாக அனுப்புதல்.

பாவனையாளர்கள் இவை பற்றி சுட்டிக் காட்டினார்கள்; நிவாரணம் கோரினார்கள்.

"முதலில் கட்டணத்தை செலுத்து. பின்னர் கொடுப்பனவுகளை சரி பார்த்துக் கொள்ளலாம்" என்ற மின்சார சபையின் ஆலோசனை பாவனையாளர்களைப் பிரமிக்க வைத்துவிட்டது.

தண்டனையை வழங்கிய பின்னர் நீதி விசாரணைத் தீர்ப்பா? கம்பியூட்டர் யுகத்தில் மின்சார சபையின் நியாயம் தகாது.

மாதப் பட்டியல்களில் தவறுகள் இருக்கின்றன என்று கூறும் பாவனையாளர்களை காரியாலயத்தில் நேரில் சந்தித்து உடனுக்குடன் கணக்கை சரி பார்ப்பதற்கு சில உத்தியோகத்தர்களை நியமித்தால் என்ன?

அவர்கள் குறைகளைக் கேட்டு, கணக்குகளைச் சரி பார்த்து வாடிக்கையாளர்களின் நல்லெண்ணத்தை சம்பாதித்துக் கொண்டு, கட்ட வேண்டிய சரியான தொகையை நிர்ணயித்துக் கூறி விடலாம் அல்லவா?

இப்படியான ஒரு நடைமுறையை செயல்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை மின்சார சபை உருவாக்குமா?

## அன்னதான மகோற்சவம்

கட்டுகஸ்தோட்டை, மே 5

மாத்தளை வெள்ளைக்கல் ஸ்ரீ அழகர் பெருமாள் கோயில் சித்திரா பூரணை அபிஷேக அலங்கார அன்னதான மஹோற்சவம் இம்மாதம் 9ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும்.

கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கொடியேற்ற வைபவம் நடைபெற்றது. 9ஆம் திகதி மகேஸ்வர பூஜையும், அன்னதானமும், 10 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், கொடியிறக்கமும் நடைபெறும்.

மேற்படி விழாக் காலங்களில் சிவனடியார்களது காவடி நிகழ்ச்சிகள், தீமிதிப்பு வைபவம், நாதஸ்வரக் கச்சேரிகள், இன்னிசைக் கச்சேரிகளும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஐ-139)

## பாக்கு மரம் முறிந்து விழுந்து இளைஞர் மரணம்

கொழும்பு, மே 6

புதுவருட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது பாக்குமரம் முறிந்து விழுந்ததால் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சுந்தானையைச் சேர்ந்த லோரன்ஸ் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ரீ ஜே அலோய் பெரேரா முன்னிலையில் நடந்தது.

விசாரணையின் முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(இ-ர).

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவின் "ஆயிலியடி" கிராமத்தில் திருத்தப்படாத நிலையில் ஓர் இறையில்லமும் மத்ரஸா கட்டிடமும்தான் இவ்வாறு காட்சியளிக்கின்றன—

இப் பகுதியில் வாழும் மக்கள் மிக வறிய நிலையில் உள்ளமையால் இக் கட்டிடத்தை கடந்த 15 வருடங்களாக திருத்திய மைத்து பூரணத்துவப்படுத்த இயலாத நிலையில் உள்ளனர்—

இதனால் இப் பகுதி மக்கள் நாளாந்த ஐவேளை, கடமைகளையும், குர்ஆன் மத்ரஸா வகுப்புக்களையும் நடத்த முடியாது பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்—

தற்போது இப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர் தனவந்தர்கள் உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றனர்—

[படமும், தகவலும்— கிண்ணியா தினபதி நிருபர்] [ஐ-151]

## யாழ் — கிளிநொச்சி மாவட்டம்: 10

# கிராமோதய சுகாதார நிலையங்கள்

புங்குடுதீவு, மே 5

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் பத்து கிராமோதய சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றிற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மேற்கொண்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் ஆழியவளை, கட்டைக்காடு, மயிலிட்டி சேந்தாங்குளம், புங்குடுதீவு, மந்துவில் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புதுமுறிப்பு, ஆனைவிழுந்தான், இராமநாதபுரம், கிளாலி ஆகிய இடங்களிலும் இந் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றிற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்தகாரர்களிடமிருந்து இம்மாதம் 27ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை அறிவித்துள்ளார்.

(ஐ-240)

## வாழ்வது அவசியம்

## — விஜயக்கோன்

மஸ்கெலியா, மே 5

சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல இன, மத பேதமின்றி சகோதரத்துவத்துடன் வாழ்தல் அவசியமாகும்.

இவ்வாறு அமைச்சர் திரு யூ பி விஜயகோன் கூறினார்—

சாமிமலை சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து சிறப்பிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திரு ஏ செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து அவர் தமதுரையில் கூறியதாவது—

இவ்வுலகம் இயங்குவது சக்தியின் அடிப்படையிலேயாகும். மண்ணுலகில் சகல உயிர்களுக்கும் சக்தியே வழிகாட்டி.

சக்தியென்று கூறப்படுகின்றபோது, அது பார்வதியைக் கருதும் இந்த சக்தியின் புதல்வர்களே முருகனும், கணபதியும் ஆவர்,

இது இந்து தர்மத்தில் கூறப்பட்டுள்ளது, அவ்விரு தெய்வங்களுக்கும் ஒருமித்து நடக்கும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்— இவ்வாறு கூறினார்—

பிரதி அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் (ணவீர) திரு பி பி தேவராஜ் உட்பட பலபிரமுகர்கள் உரையாற்றினர். (ஐ-408)

## காரியாலயம் திறப்பு

கண்டி, மே 5

வத்தேகம கோட்டக் கல்விக் காரியாலயம் நாளை 8 ஆம் திகதி திறந்து வைக்கப்படும்.

